கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய குறுகிய காலக் கடன்களை நீண்டகாலக் கடன்களாக மாற்றுவதன் மூலம் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலத்தை நீட்டிப்பதற்கான செயற் குறிப்புகளை அனுப்புமாறு கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியை கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் கேட்டுள்ளார். இந்தச் செயற் குறிப்புகள் கிடைத்தவுடன் பதிவாளர் இது குறித்து மேற்கொண்டும் நடவடிக்கைகளைத் தொடருவார்.

பல்லடம் வட்டத்தில் கூட்டுறவு மேற்பார்வை யூனியன்கள் மூன்றும், 137 கிராமக் கடன் வழங்கு சங்கங்களும் செயலாற்றி வருகின்றன. இவற்றில் 99 சங்கங்கள் வேளாண்மைக் காரியங்களுக்காக கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியிடமிருந்து கடன் வாங்கியுள்ளன. இப்பகுதியில் பருத்தியும், புகையிலையும் முக்கியப் பயிர்களாகும். சிறு பான்மைப் பகுதியில் சோளம் பயிரிடப்படுகிறது. இவ்வாண்டு ஜனவரி 1-ம் தேதி வரையில் கூட்டுறவுக் கடன் நிலுவை ரூ. 55,44,583 ஆகும். இதில் ரூ. 3,11,398 உரிய காலத்திற்குப் பின்னரும் செலுத்தப்பாடமல் நிலுவையாய் இருந்தது. 1—2—1968 தேதி முதல் 31—5—1968 தேதி வரை செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ. 33,83,291 ஆகும். இந்தப் பகுதியில் நிலவிவரும் வறட்சி நிலைமை காரணமாக, இதில் எவ்வளவு தொகையை வசூலிப்பது தள்ளிப்போடப்பட வேண்டும் என்பது குறித்துக் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் ஆய்வு செய்வார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி. என். பரமசிவம் அவர்களின் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கும் அமைச்சர் அவர்கள் கூறியது பதிலாகக் கருதப்படுகிறது.

அடுத்து, திரு. சோ. அழகர்சாமி அவர்கள் தீர்மானத்திற்கு முன் அறிவிப்பு கொடுத்துவிட்டு இருப்பிடத்தில் இல்லாததால், தீர்மானம் பேரவையின அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப் படுகிறது.

4. அரசினர் தீர்மானம்

அவை அலுவல் வரிசை மாற்றம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 26—3—1968-ல் நாம் எடுத்துக் கொள்ளவேண்டிய கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்பதை 25—3—1968-லும், 25—3—1968-ல் நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் என்பதை 26—3—1968-லும் மாற்றி எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

5. 1968—69-ம் ஆண்டிற்கான நிதி கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண்—26. பாசனம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,87,64,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

திரு. செ. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, நீர்ப்பாசனத் திட்டங்களை நவீனமாக்கி தண்ணீரைச் சிக்கனப்படுத்துவதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 26-பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 8,87.64,300-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.